பெற்று அனைத்து இடங்களிலும் இதுபோன்ற பாலகங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *354*, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

354—

கூட்டுறவுச் சங்கக் கட்டடம்

***19944—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்ப்பட்டு கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம், கீழ்ப்பட்டு கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏதும் இல்லை. எனவே சங்கத்திற்குக் கட்டடம் கட்டும் வினா எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி காசாம்பு பூமாலை: பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் ஒன்றியத்தில், கீழ்ப்பட்டு கிராமத்திலே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் இந்த நிதியாண்டிலாவது கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பதியவில்லை. அதனால் அங்கே கட்டடம் கட்டுவதற்கு உண்டான வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS